
கவிமணி

# தேசிகவிநாயகம் பிள்ளை

மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY



கவிமணி, ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை

கவிமணி

# தேசிகவிநாயகம் பிள்ளை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

சுத்தானந்த சங்கம் * திருநெல்வேலி

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

பதிப்புரிமை

முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1945

விலை அணா 7

கமெர்ஷியல் பிரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி., சென்னை
C.P. & P.H.—P.I. Card Q.H. No. MS. 120
For Anbu Nilayam P.I. Card Q.H. No. Ty. 58.

# பதிப்புரை

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள், யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களின் நீண்டகால நண்பர். நண்பர் வரலாற்றை நண்பர் அருமையாக எழுதியிருக்கிறார். இதனை இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும் பார்வையிட்டு மகிழ்ந்தனர். இது, "தேவி" அவர்களின் ஆதாரமுள்ள வரலாறாகும். கவிஞரின் பிறந்த நாளை யொட்டி, இந்நூலை வெளியிட்டுத் தமிழருக்கு அளிக்கிறோம்.

இராமச்சந்திரபுரம்
30—8—1945
௩௦—௧—௬

அன்பு நிலயத்தார்.

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அன்புக் கவிமணி | ... | 7 |
| 2. | பிள்ளைக் கவி | ... | 9 |
| 3. | சா. போற்றிக்கண்ணு | ... | 11 |
| 4. | பலிமறுத்தல் | ... | 12 |
| 5. | கல்விப் பயிற்சி | ... | 13 |
| 6. | தமிழாசிரியர் | ... | 15 |
| 7. | திருவனந்தபுரத்தில் | ... | 16 |
| 8. | பாரதியார் பாடினார் | ... | 16 |
| 9. | "பேஷையா !" | ... | 18 |
| 10. | மருமக்கள் வழி மான்மியம் | ... | 19 |
| 11. | மந்தாரை மலர் | ... | 19 |
| 12. | கல்வெட்டு | ... | 20 |
| 13. | தேவியின் கொள்கைகள் | ... | 21 |
| 14. | அறிமுகம் | ... | 22 |
| 15. | இரசிகமணி சிதம்பரநாத முதலியார் | | 24 |
| 16. | பொன்னுடை | ... | 26 |
| 17. | "மலரும் மாலையும்" | ... | 27 |
| 18. | தேவியின் கவிமலர்கள் | ... | 28 |

கவிமணி

# தேசிகவிநாயகம் பிள்ளை

## 1. அன்புக் கவிமணி

அன்புக் கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுடன் என் உள்ளம் பல்லாண்டுகள் பழகியுள்ளது. அவருக்குக் கவிமணிப் பட்டம் கிடைத்திருக்கிறது. ஆனால் தேவியை (தேசிகவிநாயகம் பிள்ளையை) நினைக்கும்போது கொஞ்சுங் குழந்தையின் அன்பே என்முன் நிற்கிறது! ஆதலால் நான் அவரை, "அன்புப் புலவர், அன்புக் கவிமணி" என்கிறேன். அவர் உள்ளம் அன்பு; அவர் சொற்கள் அன்பிற் குழைத்த அமுதம்; அவர் கவிதைகள் கருணையிற் பூத்த அன்பிசை. அவரைக் கவிமணி என்பதைவிட அன்புமணி என்பதே பொருந்தும்! அவர் உள்ளத்தில் ஓர் அன்புக் குழந்தை,

> "பூமகளின் புன்னகைபோல் பூத்திடுவோமே—கம்பன்
> பாமணக்கும் தமிழினைப்போல் பரிமளிப்போமே!"

என்று பாடுகிறது! தேவி இன்று எழுபது வயதுத் தாத்தா; ஆனால் உள்ளே ஏழு வயதுக் குழந்தையாகவே யிருக்கிறார்: வஞ்சமற்ற உள்ளம், கரவற்ற மனம். தமிழ்ப்பணியென்றால் அவருக்கு வாலிபம் திரும்பிவிடும். நான் 'சிலம்புச் செல்வம்' என்ற நூலை எழுதியபோது, அவர் படுக்கையில் இருந்தார். அதை நான் அவர் பார்வைக்கு அனுப்பத் தயங்கினேன்.

"தயங்காமல் அனுப்புங்கள்; தாங்கள் செய்யும் தமிழ்ப் பணியில் எனக்கும் பங்கு உண்டல்லவா?" என்று

நாயகம் பேசி, என் கையெழுத்துப் பிரதிகளை முற்றும் பார்வையிட்டு அனுப்பினார். அந்த உதவியை நான் எக் காலமும் மறக்க முடியாது. இப்படி என் தமிழ்ப் பணிக்கு அவர் சிற்சில சமயம் அரிய துணை செய்ததுண்டு. அவரது ஆராய்ச்சித்திறமை வியக்கத் தக்கது. தேவி குழந் தைக் கவியாக யிருக்கலாம்; ஆனால் அவர் மூளை, பெரிய புலவர் மூளை. "தமிழர் வரலாறு" ஒன்று நான் தொகுத்த போது, தேவிக்கு ஒரு கடிதம் எழுதினேன். மறுவாரமே, வரலாற்றிற்கு வேண்டிய அரிய பல ஆதார நூல்களையும், சில அரிய யோசனைகளையும் எனக்கு எழுதினார். அக் கடி தத்தால் அவருடைய சரித்திர மூளையை அறிந்து வியந் தேன். மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையைப் போன்றே, தேவியும் சரித்திர ஆராய்ச்சியிலும், கல்வெட்டு ஆராய்ச் சியிலும் சிறந்தவர். அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "காந்தளூர்ச்சாலை" ஆராய்ச்சி, சிறந்த நூலாகும்.

உலகப் பெரியார் வரலாறுகளை யெல்லாம் எழுதி வைத்த நான், தேவியின் வரலாற்றையும் எழுத விரும்பி மன்றுடினேன். "தாங்கள், என் வரலாற்றை எப்படி எழுதுவது தகும்?" என்று தேவி என்னை அடக்கிவிட்டார். என் முயற்சியை நான் கைவிடவில்லை. தேவியின் அடக்கு முறையை மீறி, நாஞ்சில் நாட்டு நண்பர் சிலர் உதவியால் அவர் வாழ்க்கைப் பண்பை நன்கறிந்து கொண்டேன்; முதன்மையாகக் கவிஞர் உமைதாணுப் பிள்ளை அவர்களைத் தூண்டிவிட்டு, தேவியிடமே மெல்ல மெல்ல வரலாற்றுக் குறிப்புக்களைக் கேட்டு எழுதியனுப்பச் சொன்னேன். பல மாதங்கள் முயன்று ஒருவகையாகச் சில நல்ல குறிப் புகள் கிடைத்தன. அவற்றைக் கொண்டே இந்த வரலாற் றுச் சுருக்கத்தை எழுதி, அன்புப் புலவருக்கு நன்றிக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்.

## 2. பிள்ளைக் கவி

தேசி, சென்ற தாது வருடம் ஆடி மாதம் 14-ஆம் தேதி பிறந்தார்—(1876). அக்காலமே வேதநாயகம் பிள்ளை, மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வில்லியப்பக் கவிராயர், சிலேடைப்புலி பிச்சுவையர், கவிகுஞ்சரி பாரதி, கோபால கிருஷ்ண பாரதி முதலியோர் அரிய கவிபாடித் தமிழும் தமிழிசையும் வளர்த்தனர். அக்காலமே தமிழில் எளிய இயற்கை நடையும், உரை நடையில் இனிமையும் தளிர்த்தன; செய்யுளும் வசனமும் மறுமலர்ச்சிச் சோலையிற் காதல்கொண்டு உலாவின. அக்காலம் தாது வருடப் பஞ்சம் கொடுமையா யிருந்தாலும், வயிற்றுணவு குறைந்தும் செவிக்குணவு மிகுதியாக விருந்தது. அக்காலத்திலே தான் நமது தேசி, தேரூரிற் பிறந்தார். அவரது வாழ்க்கைத் தேரும் மறுமலர்ச்சிப் பவனியை அணி செய்தது.

தேசியின் தந்தை சிவதாணுப் பிள்ளை, காலத்திற்கேற்ற ஆங்கிலம் பயின்ற சைவத் தமிழர். அவர் அழகிய பாண்டிபுரம் உப்புப் பண்டகசாலையில் வேலை பார்த்தார். தமிழன்பும் சிவநேசமும் கொண்ட அன்னார் மனைவி ஆதிலட்சுமி யம்மாள், நாகபட்டணம் வேளாளர் மரபில் உதித்த பூங்கொடி; பரம்பரையாகத் தமிழைக் கொண்டே வாழ்ந்த வீட்டிற் பிறந்தவர். அவரது தந்தை மாணிக்க வாசகம் பிள்ளை, கிராமிய தமிழ்ப் புலமை யுடையவர்; அவர், 'காரியந்தாதி" என்று ஒரு நூலும் பாடியதுண்டு.

தேசிகவிநாயகம் பிள்ளை, வீட்டில் செல்வமாக வளர்ந்தார்; உள்ளூர்ப் பள்ளிக்கூடத்திலேயே படிக்கத் தொடங்கினார். அப்போதே அவருக்குத் தமிழிலும் கவிதையிலும் ஆர்வம் பெருகியது. நல்ல பாட்டு, கவி யென்றால் கருத்தூன்றிக் கேட்பது பிள்ளையின் வழக்கமா யிருந்தது. அக்காலம் தமிழர், கவிஞர்களை மிக்க மதித்துத்

துதித்துச் சன்மானம் வழங்கி ஆதரித்தனர். பாண்டி நாட்டுக் கவி யொருவர் நாஞ்சில் நாட்டு நல்லார்மீது கவிபாடியும் கவிப்பிரசங்கம் செய்தும் பிழைத்து வந்தார். தமிழைப் போற்றும் சிவதாணு பிள்ளை, அக்கவியை வரவேற்று உபசரித்தார். கவி, பிள்ளையவர்களுக்குப் பாமாலை சூட்டினார். அதைப் பள்ளிக்கூடத்திலிருந்து மாலை வேளையில் வந்த தேசிகவிநாயகம் பார்த்தார். தந்தை படித்துக் காட்டினார். உடனே தேசிகத்திற்கும் அப்படிப் பாட வேண்டும் என்று எழுச்சி பிறந்தது. தன் மனதில் உதித்ததைத் தந்தை செவிகுளிரக் கொட்டினான் மகன்! அக் கவியில், "நவகோடி நாராயணன்......உப்புப் பண்டக சாலைக்கு, சிவதாணுப் பிள்ளைக் கனுகூலன், வீரபர நங்கை தேவி தானே........." என்ற சில வார்த்தைகளே தேவியின் நினைவில் இருக்கின்றன.

தேவிக்குத் தாமரைக் குளம் என்ற ஊரில் ஒரு பாட்டனார் உண்டு; அருமையான பாட்டனார்; நிரம்பத் தமிழ் கற்ற கவிஞர்; அவர் இச் சிறுவனை அன்புடன் நேசித்துத் தம்முடன் பிரியமாக வைத்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்திலேதான் தேவி படுத்துக்கொள்வது வழக்கம். கவிராயர் ஏதாவது கவி முணுமுணுப்பார். ஒருநாள் தேவி அவர் பக்கத்தில் படுத்தார். கவிராயருக்குத் தூக்கம் வரவில்லை; ஓலையில் எழுத்தாணி ஓடத் தொடங்கியது; கவியும் 'மொணமொண'வென்று கேட்டது. "ஏன் பாட்டையா, என்னை உறங்கவிடாமல் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான் பையன். "சும்மா கெடலே" என்று பாட்டையா கவியெழுதிக் கொண்டிருந்தார். பேரப்பிள்ளைக்கு அப்போதே அவரைப் போலத் தானும் பாடவேண்டும் என்று ஆர்வம் உண்டாயிற்று. அன்று கவிராயர் பாடி முடித்த "காரியந்தாதி" தேவிக்கு ஓர் எழுச்சி தந்ததென்னலாம். அவர் அன்றிரவு முணுமுணுத்த அடிகளில் "வஞ்சகப்

பெட்டிக்குள் அஞ்சனத்துப் பொருள் வைத்து வளர்" என்ற அடிதான் தேவிக்கு நினைப்பிருக்கிறதாம்.

## 3. சா. போற்றிக்கண்ணு

தேவிக்குத் தந்தையும் பாட்டனும் கருத்துடன் தமிழ் கற்பித்தனர். ஆங்கிலமும் படித்துவந்தார் நமது கவி மணி. அப்போது தேரூரைச் சார்ந்த வாணத்திட்டு மடத்திலிருந்த திருவாவடுதுறை மடத்தில், அரிய புலவர்கள் கூடியிருந்தனர். தேரூருக்கும் அந்த மடத்தில் கட்டளை யுண்டு. தேவி அடிக்கடி கட்டளைத் தம்பிரானைத் தரிசித்து வருவதுண்டு. அப்போதிருந்த சங்கரலிங்கத் தம்பிரான் நிரம்பத் தமிழ்ப்புலமையும் சைவ ஒழுக்கமும் வாய்ந்தவர். இவர் மதுரையில் சா. போற்றிக்கண்ணு என்பவனிடம் பணங்கொடுத்து, நல்ல உருத்திராட்சம் வாங்கியனுப்பச் சொன்னார். கண்ணு, பிறர் கண்ணில் மண்ணைத் தூவி வாயிலும் ஒருபிடி அள்ளிப் போட்டுக் கையிலிருப்பதைப் பறித்துச் செல்லும் பேர்வழி! அவன் பட்டப் பகலில் பலரை ஏமாற்றினன்; சாமியாரை ஏமாற்றுவதா அவனுக்குக் கடினம்? தம்பிரானுக்குத் தேவியின் கவித் திறமை தெரியும். "தம்பி, அந்தச் சா. போற்றிக் கண்ணு நம்மை ஏமாற்றினன்; அவனுக்கு ஒரு கவி பாடு" என்றார் தம்பிரான். தேவி உடனே ஒரு பாடலைச் செய்தார்: "நெஞ்செரிய வயிறேங்க நினைக்கும்போது, நித்திரை கண் விட்டொழிய சாபோற்றிக்கண்ணு நீயே..........." என்பதே நினைவிலிருக்கிறது. காக்கை யமர்ந்ததும் பனங்காய் விழுந்ததும் சரியாக யிருந்தது. தம்பிரான் இந்தப் பாட்டை எழுதித் தபாலில் போட்டார்; அது மதுரை சேரு முன்பே சா. போற்றிக்கண்ணு, கண்ணைமூடி எமலோகம் போய் விட்டான்! தேவி கவியைத் தம்பிரான் வியந்து கொண்டிருக்கும்போதே, சா. கண்ணு இறந்த செய்தி

வந்தது. தம்பிரான் தேவியின் வாக்கைப் போற்றினார். இக்காலம் தேவியின் தந்தை காலமானார்.

## 4. பலிமறுத்தல்

தேரூரில் கல்லமாடன் கோயில் உண்டு. அதற்குத் திருவிழாக் காலங்களில் ஆடு கோழிகளைப் பலியிடுவார்கள். ஒருதரம் தேவி தம் இளமையில் பள்ளித் தோழருடன் திருவிழாவில் பேய்க்கொடை (சிறு தெய்வங்களுக்கு ஆடு கோழி பலியிடுதல்) காணச் சென்றார். இரவில் அங்கே ஆடுகள் கதறின; கோழிகள் 'ஐயோ' வென்றலறின; பலி பீடமெல்லாம் இரத்தம் ஓடியது. பூசாரியின் கல்மனம் மாடன் பெயரை வைத்துப் பல உயிர்களைக் கொன்றது. இளகிய மனங்கொண்ட தேவி, இதைக் காணச் சகிக்காமல் உளங்குழைந்தார். நண்பர்கள் பலியைக் கண்டித்துப் பாடச் சொன்னார்கள். இளம் புலவர் உடனே,

"நாடோறும் தேடியிடும் நற்றேரூர் தன்னிலமர்
கல்லமாடனென்றும், மறவனென்றும்,
கோடிபழி செய்த பெருங் கொலைஞர், வேதம்
கூறியதெனவே தெளிந்துகொண்டு
ஆடினார், ஆடறுத்தார், அள்ளியுண்டார், ஐயையோ
இக்கொடுமை அறிகிலேனே...."

என்று பாடினார். பாட்டு முழுதும் அவருக்கு நினைப்பில்லை. ஆசியசோதி (The Light of Asia) மொழிபெயர்ப்பில் இளம் உள்ளத்தில் தளிர்த்த கருணை, தமிழ்வாக்காக வருகிறது:

"காட்டுப் புலியின் கொடுமைக் கஞ்சி—உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ?—அந்த
நான்மறை போற்றிய நீதி ஐயா!"

மண்ணில் வளர்ந்திடும் புல்லை யுண்ணும்—வான
மாரிபொழிந்திடு நீரை யுண்ணும்,
எண்ணரி நீர் செய்யும் உதவியென்றும்—இதை
ஏனோ உணர்ந்திலீர் மானிடரே?"

* * *

நாகர்கோயில், முன்னே சமணபுரியாக இருந்தது. இன்னும் அவ்வூர் நாகரம்மன் கோயில் தூண்களில் சமண பௌத்த சம்பந்தமான உருக்களைக் காணலாம். சில புத்த வுருக்களும் உண்டு.

புத்தேரி என்பதையும் சிலர் 'புத்தபுரி' என்பர்; அது சரியன்று. யோகீஸ்வரர் என்ற பெரியார் ஒருவர் சமாதி யடைந்த ஊர் இது. இச்சமாதியிடத்தில் முப்பதடி உய ரம் புற்று ஒன்று வளர்ந்திருப்பதால் இவ்வூர் புற்றேரி புற்றுச்சேரி, புத்தேரி என்றானது. ஆயினும் தேவிக்குப் புத்தர் கருணையில் பற்று உண்டு. "ஆசிய ஜோதி"யே அதற்குச் சான்று. அக்காவியமே தேவியின் உள்ள மென்னலாம்.

## 5. கல்விப் பயிற்சி

தேவி, திருவாவடுதுறை ஆதீனம் கட்டளைத் தம்பிரா னாகிய சாந்தலிங்கனாரிடம் முறையாகத் தமிழ் பயின்று புலமை பெற்றார்; திருநெல்வேலி உமையொருபாகக் குருக்களிடம் தீக்ஷை பெற்றார். சமயாசாரியாரைப் புகழ்ந்து தேவி அப்போதே ஒரு வெண்பாப் பாடினார்:

"வேறு மொருதுணையான் வேண்டுவதேன் வேணுவனந்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே—கூறுமெனக்
கெய்யாப் பிறவி யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது."

இக்காலம் இவர் பாடிய "அழகம்மை ஆசிரிய விருத்தங் களும்," "சுசிந்தை மாலை"யும் இவரது புலமையைக்

காட்டும். இவை சாந்தலிங்கத் தம்பிரான் விரும்பப் பாடியவை :

"ஆற்றுப் பெருக்கையொத் தழிகின்ற செல்வத்தை
 அடைவதில் விருப்பும் இல்லேன் ;
ஆண்டியாய் வேண்டிப் புசித்துண்டு நாடோறும்
 அலேவதில் வெறுப்பு மில்லேன் ;
காற்றுப் பெயர்ந்திடிற் காயமோ சூத்திரக்
 கயிரற்ற பாவை ; அதனுல்,
காரியம் சிறிதேனும் உளதோ ? உன் இருபதக்
 கஞ்சமே தஞ்சமென்று
போற்றிப் பெரும்பேறு பெறுதற்கெ னுள்ளமெப்
 போதுந் தவிக்குதம்மா !
பொங்கிடுங் குரவையிட் டெங்குமோ ரொலிசெய்து,
 பொலிவாக மள்ளரெல்லாம்
சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற
 செய்யகஞ் சூழும் ஊராம்,
தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே,
 தேவியழ கம்மை உமையே !"

இது தாயுமானவரின் "வளர்காதலிப் பெணுமையே" என்ற அரிய விருத்தம்போல் அமைந்திருக்கிறது. தேவியின் பழுத்த அனுபவமும், வேளாண்மையில் அவருக்கு உள்ள விருப்பமும், இயற்கைக் காட்சியின்பமும் இப்பாட்டில் தோய்ந்து கிடக்கின்றன.

"திங்களுன் கருணை காட்டும் ; திக்கனுன் வெகுளி காட்டும்;
கங்கையுன் பெருமை காட்டும்; கடுவுமுன் ஆண்மை
 காட்டும் ;
சிங்கமுன் இடையைக் காட்டச் சிறையனம் நடையைக்
 காட்டும் ;
மங்கையோர் பாகா, தாணு மாலயா, சுசிந்தை வாழ்வே!"

என்ற விருத்தம் அப்பரின் தேவாரப் பண்பு கொண்டொலிக்கிறது!

## 6. தமிழாசிரியர்

பிள்ளையவர்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற் பயின்று மெட்ரிகுலேஷன் தேறியதும், F. A., வகுப்பிற் சேர்ந்தார். ஆனால் கல்லூரிப் படிப்பு முற்றுப்பெறவில்லை. அதற்குள் திருமணமும் ஆனது; குடும்பச்சுமையும் வந்தது. ஆதலால் தேவி போதனாமுறைப் பள்ளிக்கூடத்தில் பயின்று, செகண்டரி கிரேட் (Secondary Grade) உபாத்தியாயராகத் தேர்ச்சி பெற்று, கோட்டாறில் வேலைக்கமர்ந்தார்; பிறகு நாகர்கோயிலில் ஆசிரியராயிருந்தார். அக்காலம் குழந்தைகளுக்காக இவர் பாடிய பாடல்கள் மிகப்பலவாம்.

"பாலுக்குச் சீனியைப்போல்—பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசைபோல்,
சோலைக்குப் பைங்கிளியே—உனது
துணையும் பெரிதேயம்மா!"—

என்று கிளியைப் பாடுவார். ஒருநாள்,

"பூமகளின் புன்னகைபோல் பூத்திடுவோமே—கம்பன்
பாமணக்கும் தமிழினைப்போல் பரிமளிப்போமே!

* * *

"கரும்பினிலும் இனியரசம் கருதிவைப்போமே—அதை
விரும்பிவரும் பாணருக்கு விருந்தளிப்போமே!"—

என்று மலர்களைப் பேசவைப்பார். இப்பாட்டு தேவி பாடலின் சிகரம் என்னலாம். தேசிகவிநாயகம் பிள்ளை பாடல் என்றால், சிறுவருக்குத் தேனும் பாலுமாகத்தான் இனிக்கும்! மாணவ மாணவிகளிடம் இப்புலவர் மிக்க அன்புடன் இருந்தார். இவர் பாடம் சொல்லும் முறையை அனைவரும் விரும்பினர். இவரது தமிழ்ப் புலமையை வியந்து, திருவிதாங்கூர் அரசாங்கம் இவரை

மகாராசா பெண்கள் கலாசாலைத் தமிழாசிரியராக நிய மித்தது. இதுவே இவர் பார்த்த உயர்ந்த உத்தியோகம்.

## 7. திருவனந்தபுரத்தில்

பெண்கள் கலாசாலைப் புலவர்மணி, திருவனந்தபுரம் அறிஞருக்கே கண்மணிபோல விளங்கினார். அக்காலம் புலவர்மணி வையாபுரிப் பிள்ளையும், நீதிபதி சேஷையரும், அவர் மருமகன் கே. ஜி. சங்கரையரும், இன்னும் சில வித்துவான்களும் அங்கே இருந்தனர். எல்லாரும் தமிழில் தக்க படிப்பும், ஆங்கிலத்தில் பட்டமும், தமிழன்பும், ஆராய்ச்சியு முடையவர்கள். மாலைதோறும் இவர்கள் ஓரிடத்திற் கூடி, சங்கநூல்களையும் தமிழர் நாகரிகப் பண்பையும் ஆராய்வதுண்டு. சேஷையர் சேரநாட்டுச் சரித்திரம் எழுத இக்காலம் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். வையாபுரிப் பிள்ளை வரிசையாகத் தமிழாராய்ச்சி நடத்தினர்; அவர் மனமே தமிழில் தோய்ந்திருந்தது. இவர்களுடன் தேவியும், சிலப்பதிகாரம், பதிற்றுப் பத்து, சிந்தாமணி, புறநானூறு முதலிய அரிய நூல்களை ஆராய்ந்தார்; கல்வெட்டுகளையும் ஆராய்ந்து, தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்துபார்த்தார். இதைப்பற்றி வையாபுரிப் பிள்ளையே மிகச் சிறப்பாகப் பேசியிருக்கிறார். 1920-ஆம் ஆண்டு மேற்கூறியவாறு புலமை சிறந்து விளங்கினார், தேவி.

## 8. பாரதியார் பாடினார்

இந்தச் சமயந்தான் கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியார் திருவனந்தபுரத்திற்கு வந்தார். பாரதியார் உறவினர் மகளுக்குக் கலியாணம் நடந்தது. உறவினர், சர்க்கார் உத்தியோகஸ்தர்; "பாரதி" என்றால் "புரட்சிக்காரன்" என்று பயந்து அவர்கள், கவியை அலட்சியமாக நடத்தினர்; உள்ளே வரவேற்கக் கூசினர். பாரதியார் மனமன

வென்று உள்ளே சென்று, அவர் மனைவியிடம் யோக க்ஷேமங்கள் விசாரித்து, பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஆசீர்வதித்தார்; பிறகு ஊரைச் சுற்றக் கிளம்பினார். அன்று மாலை வையாபுரிப் பிள்ளை சேவையர் முதலியோர் தமிழா ராய்ச்சி செய்துகொண் டிருக்கையில் தடதடவென்று, ஒரு கிர்க்கிக் கட்டுப் பேர்வழி உள்ளே நுழைந்தார்! அவரை யாரும் அறியவில்லை. அவரே, "நான் யார் தெரியுமா?" என்ற கேள்வியைப் போட்டார். எல்லாரும் 'யார்' என்னுமுன்பே, "நான்தான் சுப்பிரமணிய பாரதி" என்றார். உடனே வையாபுரிப் பிள்ளையும் புலவர்களும் அவரை ஏற்று அமர்த்தி, "ஒரு பாட்டு" என்னு முன்பே "வெடிபடும் அண்டம்" என்று கட்டிடம் நடுநடுங்க எட்டுத் திசையும் அதிர, "ஊழிக் கூத்தை"ப் பாடினார். புலவர்மணிகள், தமிழ்ப் பாட்டின் விறு விறுப்பையும் பாரதியாரின் வாக்கினிமையையும் உணர்ச்சிக் கனலையும் வியந்தனர்! ஆனால் அக் கூட்டத்தில் தேவி யில்லை; விடு முறை நாளானதால் தேரூருக்கு வந்துவிட்டார். பிறகு விபரம் அறிந்து, பாரதியைக் காணும் பாக்கியம் பெறா மைக்கு வருந்தினார்.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!—அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினனடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா!—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா!"

என்று தேவி பாரதியாரைச் சிறப்பித்துப் பாடியதில் வியப் பில்லை.

மறுநாள் உறவினர், தமது சம்பந்திகளை வண்டியில் அழைத்துச் சென்று, காட்சிசாலையைக் காட்டினார்; பாரதியார் தமது மனைவி மக்களுடன் நடந்தே சென்று காட்சி சாலையைக் கண்டு, மிருகங்களை யெல்லாம் அண்ணன் தம்பி என்று கொண்டாடிச் சிங்கத்திடம் வந்தார்!

"தம்பி, நீ மிருகராஜ்; நாம் கவிராஜ்! வா, நேசங் கொண் டாடுவோம்" என்று தடவிக் கொடுத்தார். மிருகராஜ னும் "ஹஹாகாரத்துடன்" தனது நட்பைக் கர்ஜித் தது. எல்லாரும் பயங்கர வியப்புடன் இக் காட்சியைப் பார்த்தனர்! பாரதியார், காட்சி சாலையிலிருந்து நடந்தே திரும்பினார். வழியில் சேஷையர் கண்டு தமது கோச்சில் கவியை அழைத்து வந்து, "இந்த ஊரில் இருக்குமட்டும் என் வண்டியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என் றார். உறவினருக்கு அப்போதே கவியின் பெருமை தெரிந் தது. இரவில் சித்திரையின் நாதஸ்வரம் ஊர்வலத்துடன் நடந்தது. பாரதியார் அவன் ஊதிய பைரவியை மிகவும் இரசித்துத் தலையாட்டிக் கொண்டிருந்தார். அவரைச் சுற் றிப் பெரிய கூட்டம் கூடிவிட்டது. உறவினர், பாரதிக்கு மாலை சூட்டித் தாம் முதலில் அலட்சியமாக யிருந்ததற் காக வருந்தி, உபசரித்தனர்.

தேவி, பெண்கள் கலாசாலை ஆசிரியராக யிருந்த போது, நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல; எல்லாம் தமிழ் இலக் கிய சம்பந்தமானவை. ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கே குறிப்போம்.

## 9. "பேஷையா!"

அக்காலம் சுசீந்திரம் ஆறுமுகம் பிள்ளை, சதாவதானி யாகப் புகழ்பெற்று விளங்கினார். ஒரு நாள் அவர் சேஷையர் தலைமையில் தசாவதானம் நடத்திக் காட்டினார். சபை வியந்து போற்றியது. தலைவர் சேஷையர், "சபாஷ், பேஷ்" என்று மெச்சித் தேசிகவிநாயகம் பிள்ளையின் அபிப்பிராயத்தைக் கேட்டார். உடனே ஓர் அரிய கவி புறப்பட்டது. அன்புப் புலவர் அக்கணமே எழுந்து நின்று,

“ஆறுமுகம் பிள்ளை அவதானங் கண்டெளியேன்
வேறுமுக மன்கூற வேண்டுமோ?—தேறுமதிச்
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்து “ஸபாஷ்
பேஷையா” என்ற பிறகு—”

என்று பாடினார். சபை இந்த அவதானத்தைக் கண்டு திகைத்து வியந்தது! என்ன பொருத்தமான பாட்டு! இப்படி அவர் பாடிய பாடல்கள் கணக்கற்றவை யாகும்.

## 10. மருமக்கள் வழி மான்மியம்

திருவிதாங்கூரில் மருமக்கள் தாயமுறை உண்டு. அதனால் பெற்ற மக்கள் திண்டாட, மற்ற மக்கள் உறவாடிப் பொருளைக் கொள்ள நேர்ந்தது. இம்முறையால் பல கேடுகள் விளைந்தன. பலதார மணமும் வலுத்தது. சொத்தை, மருமக்களுக்குப் பாக்கியில்லாமல் தாமே உள்ளவும் அனுபவித்துத் தீர்க்கவே செல்வர் ஐந்தாறு மனைவிகளைக் கட்டிக்கொண்டனர். இந்த மருமக்கள் தாயமுறையை ஒழிக்கத் தேவி தைரியமாகப் பாடுபட்டார். அக்காலும் அவர் செய்த “நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்” என்ற அகவற்பாட்டு, நகைச்சுவையும் உணர்ச்சியும் மிக்க இலக்கியமாகும். அரசாங்கத்திற்கு இன்னார் எழுதியது என்றே தெரியாமல், அவர் இந்நூலைப் புனைபெயரால் எழுதினார். இந்நூல் இப்போதே வெளி வந்திருக்கிறது. இது பலருக்கு உணர்ச்சி தந்து, சமுதாயத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டது. இதில் வரும் பஞ்சகல்யாணிப் பிள்ளையின் வாழ்க்கையைப் படித்து நகைக்காதவர் உண்டா? விமர்சனம் மிகை! படித்துப் பாருங்கள்.

## 11. மந்தாரை மலர்

தேரூரில் தேவியின் நண்பர் ஒருவருக்கு இளமையிலேயே திருமணம் ஆனது. வீட்டுக்கவலை அந்த நண்பரைப் பற்றிக்கொண்டது. மனைவி நீண்டநாள் பூப்பெய்

தாக் குறை வேறு. வாலிபத்துடிப்பு மனைவியின் பூப்பை எதிர்பார்த்து ஏங்கியேங்கித் தவித்தது. ஆள் விரக்தி யடைந்து மதுரைக்குப் போய்விட்டார். பிறகு தகவ லில்லை. ஆண்டுகள் கழிந்தன. ஒருநாள் அவர் மனைவி பூப்பெய்திய செய்தி வந்தது. கவிஞர் துள்ளிக்குதித்து, பின்வரும் கவியை உடனே எழுதித் தமது நண்பருக்கு அனுப்பினார்.

"மங்காவை மலர்ந்திருக்க மதுவுண்ணும் வண்டெங்கே?
மாமுல்லைக் கொடிபடர வளருங்கொள் கொம்பெங்கே?
சிந்தாத மணியிருக்க வொளியெங்கே சென்றதெனத்
தேருரிற் பலர் கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு,
நந்தாத பரஞான வமுதுண்டு தெவிட்டெறியும்
நற்பரமா னந்தவருள் பெறச்சென்று, நண்பாநீ
வந்தாலே மறுமொழியும் வகுப்பமெனச் சோதிடநூல்
வல்லாருங் கூறுகின்றார்; வகையேதும் அறியேனே!"

இந்தப் பாட்டைக் கண்டதும் நண்பர் வந்தார்; மனைவி யைக் கூடி இல்லறம் நடத்தி இன்புற்றார்!

## 12. கல்வெட்டு

தேசிகவிநாயகம் பிள்ளைக்குக் கடவுளன்பு அதிகம்; பெரி யார்களிடமும் வணக்கம் உண்டு. ஆனால் மூடக் கொள்கைகளில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. நாகர் கோயில் 'டவுண் கிளப்பு'க்குத் தெற்கே ஓர் ஆபாசமான இடம் இருந்தது. மூக்கைப் பொத்திக்கொண்டுதான் அங்கே செல்ல வேண்டும். ஒரு நிமிஷங்கூட அங்கே நிற்கமுடியாது. அந்த இடத்தில் ஒரு நட்டகல் இருந் தது. அதைப் பாமரர் 'இசக்கியம்மை' என்று பயந்து எண்ணெய் தடவி, நீராட்டி, மலர் சூட்டி வணங்கி வந்த னர். அந்த இடத்தில் ஆளே நிற்க முடியாது! அம்மன் எப்படி யிருக்கும்? இக் கல்லைப்பற்றி வித்துவான் உமை தாணுப் பிள்ளை, தேசிகவிநாயகம் பிள்ளையிடம் சொன்

னார். பாட்டையா, உடனே தடியூன்றிக் கிளம்பினார்; நாற்றத்தைச் சகித்துக்கொண்டு எப்படியோ அங்கே நின்று கல்லை ஊன்றிப் பார்த்தார்; "ஆ! கல்வெட்டு" என்றார். கல்வெட்டுகளில் தேசிக்கு நல்ல பயிற்சி யுண்டு. உடனே தேசி, கல்லிற் பதிந்த மெழுக்கையும் அழுக்கையும் சுரண்டினார். பார்த்தவர், "ஐயா, இசக்கி; தொடாதீர்" என்றார்கள். தேசி, "இசக்கி யில்லை ஐயா; இது இராஜராஜ சோழன், அல்லது ஒரு சோழனைப் பற்றிய கல்வெட்டு" என்று கண்டு மகிழ்ச்சியுடன் படித்துச் சொன்னார்! அந்தக் கல்லெழுத்துக்கள் தலையெழுத்துப் போலிருந்தும், தேசி ஊன்றிப் பார்த்துப் படித்துவிட்டார். அதில் "அஞ்சினான் புகலிடமாக" என்ற வரி சரித்திரப்பொருள் நிரம்பியதா யிருந்தது. இதைப் பற்றிய ஆராய்ச்சி யொன்று "தமிழன்" பத்திரிகையில் வெளிவந்தது.

## 13. தேசியின் கொள்கைகள்

தேசிகவிநாயகம் பிள்ளை பழம்பெரும் புலவர்; பழைய நன்மைகளை விரும்புவார்; புதிய நன்மைகளையும் போற்றுவார். மூடக் கொள்கைகளை அவர் பலமாகக் கண்டிக்கிறார்.

"பூவும் வேண்டாமே—பழமும்—பொரியும் வேண்டாமே;
மேவும் உள்ளன்பே—தேசி—விரும்பும் நல்லமுதாம்.

* * * *

குருடர் கூடிநின்று—கற்பூரம்—கொளுத்திக் காட்டுவதால்
சிறிதும் நன்மையுண்டோ?—இதனைச்—சிந்தனை செய்வாயே!

* * * *

கூவிப் பறக்குமொரு—கிளியினைக்—கூண்டில் அடைத்து வைத்
[தால்,
தேவர் உலகமெல்லாம்—அதுசிறைத்—தீமை எழுப்பிடுமே!

* * * *

தேரைகள் ஓடையிலே—இனத்தொடு—சேர்ந்து மிதக்கையிலே;
நாரைகள் வந்திடவே—பாவிமனம்—நைந்து குழைந்ததடி!

சாதி சாதியென்று நிதம்—சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி யுடைப்பதொரு—மூடச்செயலென் றுணரீரோ ?

கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழில்
சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானே ?

ஆலயங்க ளேனையா ? அபிஷேகங்கள் ஏனையா ?
கோலங்கொடிக ளேனையா ? கொட்டுமுழக்க மேனையா ?

பாலும் பழமும் வைத்துநிதம் பணிந்துநிற்ப தேனையா ?
சீலம்பேணும் உள்ளத்தைத் தெய்வம் தேடிவாராதோ ? ”

ஆம் என்று நம் உள்ளம் தேவிக்கு நன்றி கூறுகிறது !

## 14. அறிமுகம்

நான் தமிழ்க்குருகுலத்தில் இருந்தபோதுதான் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பெயரைக் கேள்விப் பட்டேன். பூதப்பாண்டியிலிருந்தும் சுசீந்திரத்திலிருந்தும் நாகர்கோயிலிலிருந்தும் சில மாணவர் வந்து என்னிடம் படித்தனர். அவர்கள் என் பாடல்களைக் கேட்கும்போ தெல்லாம், “ஐயா, எங்கள் தேசிகவிநாயகம் பிள்ளை அதைப் பாடினார் ; இதைப் பாடினார் ; சிறு குழந்தை களுக்கு நன்றாகப் பாடுவார் ; நல்ல புலவர்” என்றெல்லாம் புகழ்ந்தார்கள். பிறகு, “குமரன்” ஆசிரியர் சொ. முருகப்பா அவர்கள், கவியை நேரே பார்த்துவந்து மெச்சினார். நான் பிரமசாரிகளுடன் குமரிமுனைக்குச் சென்றேன்; வழியில் நாகர்கோயிலில் தங்கியபோது ஒருநாள் புத்தேரிக்கும் தேரூருக்கும் சென்றுவந்தேன். நாஞ்சை மாணவன் முத்துக்குமாரசாமி, “இதோ, எங்கள் தேசிகவிநாயகம் பிள்ளை வீடு” என்று காட்டினான். ஆனால் புலவர் அப்போது திருவனந்தபுரத்தில் இருந்தார். திருவனந்த புரத்திற்கு நான் சென்றிருந்தபோது அவரைப் பற்றி விசாரித்தேன். “மகிளாமந்திரம்” ஒன்று அங்கே

உண்டு. அதைப் பார்க்கச் சென்றிருந்தபோது "இந்த ஊர் பெண்பாடசாலைத் தமிழையா, தேவி மிக்க நல்லவர்" என்று ஒரு பெண்மணி சொல்லக் கேட்டேன். அப்போது விடுமுறைநாளானதால் தேவி கன்னியாகுமரிக்குச் சென்றிருந்தார். நான் அவரைச் சந்திக்க முடியவில்லை. எனினும், தேசிகவிநாயகம் என் அன்பை அப்போதே கொள்ளை கொண்டார்.

அவர் பாடல்களை முதன் முதல் நான் குமரனில் கண்டு மகிழ்ந்தேன். பிறகு, கானவித்யா என்ற பத்திரிகையில் சில மொழிபெயர்ப்புக் கவிகள் வந்தன. பின்னால் கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், லக்ஷ்மி, தமிழ்நேசன் முதலிய பல பத்திரிகைகளில் தேவியின் பாட்டைக் கண்டு களித்தேன். என்னையும் அவரையும் ஒன்றுசேர்த்தது தமிழ்ப்பணிதான். அன்பு நிலயத்தார் எனது அன்பு மலர்களை முதன் முதல் அவருக்கே அனுப்பி வந்தனர்; "சுத்தானந்த அடிகளின் உருவத்தைப் படத்தில் கண்டேன்; உள்ளத்தை நூலில் கண்டேன்!" என்று போற்றி எழுதியிருந்தார் கவிமணி. அவர் அன்புரைகள் என்னை மிக்க மகிழ்வித்தன. எனது "இன்பமாலை"க்கும் "திருக்குறளின்பத்"திற்கும் "யோகசித்தி"க்கும் "உடலுறுதிக்"கும் அவர் எழுதியனுப்பிய புகழ்மாலைகளெல்லாம் தமிழன்னைக்குரிய மாலைகளாகும். அவற்றால் அவரிடம் என் அன்பு பெருகியது. "சிலம்புச் செல்வ" ஆராய்ச்சியின்போது அவரது நுண்ணறிவைக் கண்டு வியந்தேன், இன்னும் பல சந்தர்ப்பங்கள் எங்கள் உள்ளத்தை அன்பினாற் பிணைத்தன. "கவிக்குயில் பாரதியார்" நூல்களைப் பார்வையிடும் பணிகளில் இருவரும் பங்கு கொண்டோம். இவ்வாறு நட்புரிமை பெருகிவரும் நாளில், தேவியின் பாடல்களை அன்பு மலர்களாக அச்சிடவேண்டும் என்று முயற்சிசெய்து கொண்டிருந்தேன். நண்பரும் முன் வந்தனர். நான் சில பாடல்களைச் சேகரித்தேன். அப்

போது ஒருநாள் எனக்கு ஒருநூல் வந்தது; ஆவலாகப் பிரித்தேன்; அதுவே "மலரும் மாலையும்"—தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்கள்! அத்துடன் அறிஞர் மு. அருணாசலம் ஒரு கடிதமும் எழுதியிருந்தார்; என் உள்ளம் கரை கடந்த மகிழ்ச்சி யடைந்தது! என் கண்முன்பே ஒரு தமிழ்க்கவியைத் தமிழர் போற்றிக் காணும் புண்ணியத்தை அடைந்தேன். பிறகு கலைமகளில் இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் ஆவேசமான புகழுரை வந்தது. அதுவே தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிக்குச் சிறந்த சன்மானமாகும். அன்றுமுதல் தேசிகவிநாயகம் பாடல்கள் தமிழகத்தில் உலாவிப் பெரும்புகழ் பெற்று விளங்குகின்றன. தேசியின் கவித்திறனைச் செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரனாரே மெச்சிப் போற்றிக் "கவிமணி" என்ற பட்டமளித்தார் என்றால், வேறு என்ன சொல்ல விருக்கிறது! பச்சையப்பர் கல்லூரியில் நடந்த புலவர் மகாநாட்டில், நமது கவிப் பிள்ளைக்குக் "கவிமணி" யென்ற பட்டம் பொருத்தமாக அளிக்கப் பெற்றது.

## 15. இரசிகமணி சிதம்பரநாத முதலியார்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையைப்பற்றி எழுதும் போது, இரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிதம்பரநாத முதலியாரை என் வீரத் தோழர் ஸ்ரீ வ. வே. சு. ஐயர், ஒரு முறை "நாத முதலியார்" என்றார்; அது மிகப் பொருத்தமானதே. சிதம்பரநாத முதலியார், கவிதைக் கலையை ஆழ்ந்து அனுபவிப்பவர். கம்பன் உள்ளம் படைத்த இரசிக சிகாமணி. அவருக்கு, ஒரு கவி உண்மை யென்று பட்டால் போதும்; அந்த நாதமணி எங்கும் அதிர ஒலிக்கும். தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதை இன்று தமிழர் உள்ளத்தில் தக்க இடம்பெற்றதன்

பெருமை, முதலில் நாத முதலியாரையே சேரும். தேவி, "ஏதோ குழந்தைகளுக்காகப் பாடினேன்" என்று புத்தேரிக் குடிலில் விநாயகப் பெருமான் முன் சும்மா இருந்தார்:

"செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்த நூல் உரியதாய் என்றும் வாழ்கவே—"

என்பது அவர் தமது அருமைக் காவியத்திற்கு அளித்த செய்தியாகும். சிதம்பரநாத முதலியாரே தேவியின் பாடல்களைத் தமிழகமெங்கும் ஒலித்தார். அவர் எந்தக் கூட்டத்திலும், எந்த மேடையிலும், எந்தச் சம்பாஷணையிலும் தேவியின் கவிதையை முதலிற் பாடிக்கொண்டுதான் எழுந்திருப்பார். இரசிகமணி எனக்கு எழுதும் கடிதங்களிலும் தேவியின் பாடல்களைப் போற்றுவதுண்டு. முதிர்ந்த அனுபவம், தற்பெருமையில்லாக் குழந்தையுள்ளம், வெள்ளை மனம், கவிச் சுவையிலேயே தோய்ந்த மூளை, நல்ல கவிஞர்களை ஓரகமில்லாமல் ஆதரிக்கும் பெருங்குணம் ஏனைய பூண்டவர் முதலியார். அவரால் தமிழ் மணம் பெற்றவர் பலராவார்: சென்னையில் அவர் இருந்த காலமெல்லாம் தமிழ்க் கலைக்குச் சுக்கிரதசைதான். அப்புசாமி ஐயர் வீட்டிலும், தமது வீட்டிலும் அவர் நடத்திய கம்பன் கலை விருந்துகள் தமிழுக்கே புத்துணர்வளித்தன.

சிதம்பரநாத முதலியாரை, இரசிகரைப் படைத்த இரசிகர் என்னலாம். அவரால், ராஜாஜி, டாக்டர் திருமூர்த்தி, ஸர் ஷண்முகம் முதலிய பல தமிழர், தமிழ்ச்சுவையறிந்தார்கள். குறள் பொருட்பாலுக்கு ராஜாஜி செய்துள்ள அழகான மொழிபெயர்ப்பைப் படித்ததும், என் உள்ளம் சிதம்பரநாத முதலியாரின் தமிழ்க்காந்தத்திற் சென்றது. ராஜாஜி, திருக்குறளை இரசிக்கும்படி செய்தவர் இவரே. இத்தகைய சிதம்பரநாத முதலியார், கவிமணியின் கவிதைகளைத் தமிழர் நன்கு அறிந்து போற்ற, நீண்ட

காலம் (சுமார் பன்னிரண்டாண்டுகள்) பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார். தேவியை இன்று போற்றும் கலைஞர், சிதம்பரநாத முதலியாரையும் போற்ற வேண்டும்.

## 16. பொன்னாடை

தமிழர் உள்ளத்தில் (சிதம்பரநாத முதலியார் செயலால்) தேவியின் கவிதைகள் ஆழ்ந்து பதிந்தன. அவரைப் பழைய முறையில் ஊர்வலஞ் செய்து, பொன்னாடை போர்த்திச் சன்மானம் வழங்கக் காரைக்குடிச் செல்வர் முயன்றனர். அந்த முயற்சி ஒருநாள் நிறைவேறியது. அதற்கும் தூண்டுகோலா யிருந்தவர் சிதம்பரநாத முதலியார் அவர்களே. தமிழர், தேவியின் கவிவாணியைச் சிறப்பிக்கத் துடித்தனர். முடிவில் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் அவர்களால் ஆத்தங்குடியில் தேசிகவிநாயகம் பிள்ளைக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. அப்போதும் தேவி மிகவும் பணிவுடனே, "ஆனைக்குட்டிக்குப் போர்த்தும் ஆடையை ஆட்டுக்குட்டிக்குப் போர்த்தினீர்களே!" என்றார். தற்புகழ்ச்சி சிறிதும் இல்லாத அவர் உள்ளம் அப்படிப் பேசியதும் இயல்பே. தேசிகவிநாயகம் பிள்ளை காரைக்குடிக்கு வந்து, குமரன் ஆசிரியர் சொ. முருகப்பா அவர்களின் மகளிர் இல்லத்தில் அரசு நட்டு, காரைக்குடி நகர மாளிகையில் அரிய சொற்பொழி வாற்றினார். செட்டிநாட்டரசர் தமது அரண்மனையில் கவியை ஏற்று உபசரித்துக் காணிக்கை யளித்தார்; பின்பு வெள்ளிப் பாத்திரங்களும் பரிசளித்தார். தமிழர் உயிருடன் ஒரு கவியை ஆதரித்த பெருமையும் மிக்க அருமையே!

இன்று தேவியின் பெயரும் புகழும் தமிழ்நாட்டு மூலை முடுக்குகளிலெல்லாம் பரவியிருக்கிறது. எந்தப் பத்திரிகையும் எந்தப் புலவரும் அவரைப் போற்றுகின்ற

னர். 'தமிழகத்தின் உயிர்க்கவிகளில் தேசிக விநாயகம் ஒருவர்' என்பதை மறுக்க முடியாது.

1931-ல், தேவி பள்ளிக்கூட ஆசிரியர் வேலையினின்றும் ஓய்வு பெற்றார். அதுமுதல் அவர் உடம்பும், நோயால் வருந்தியது. எனினும், நோயைப் பாராட்டாமல் அவர் தமிழ்ப்பணி செய்தே வருகிறார். ஒருதடவை நீரழிவு நோயால் மிக்க வருந்தி உடல் விழுந்துவிடுமோ என்னுந் தறுவாயில் அவர் திருச்செந்தூர் முருகனை வேண்டிப் பாடினார். உடம்பு குணமானது; அதன்பிறகே பொன்னுடையும் வெள்ளிப் பரிசுகளும் வந்தன. இன்று தேவிக்கு எழுபதாண்டுகள் ஆகின்றன. அவர் முருகன் அருளால் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழ்ப்பயிரை வளம் பெற வளர்க்க வேண்டும்.

## 17. "மலரும் மாலையும்"

தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களை "மலரும் மாலையும்" என்ற பெரிய நூலாகப் புதுமைப் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். அந்நூல் மூன்று பதிப்புகள் ஆகி ஏராளமான தமிழர் உள்ளத்திற்கு இன்பமளித்து வருகிறது. அதைப்பற்றிய ஆராய்ச்சி பல பத்திரிகைகளில் வந்து விட்டன. ஸ்ரீ பி. ஸ்ரீ அவர்கள் அதை ஆனந்தக் களிப்புடன் கொண்டாடித் தினமணியில் எழுதிய கட்டுரைகளை நேயர்கள் படிந்திருக்கலாம்; இங்கே நான் ஆராய்ச்சியிற் புகவில்லை. ஒரு கவியை ரசாயனப் பாகுபாடு செய்து கொண்டிருப்பதைவிட, அறிந்து சுவைத்தலே பலனைத் தரும். ஆதலால் தேவியின் கவிகளை அப்படியே படித்துப் படித்து இன்புறவேண்டும் என்று வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவரது இனிய முதிய பழுத்த வாக்குகளில் சிலவற்றை மட்டும் கீழே குறித்து, இந்த வரலாற்றை முடிக்கிறேன்.

“ நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவுஞ் செங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே ! ”

இது குமரகுருபரர் வாக்கைப்போல் உள்ளது. தமிழிலேயே பல்லாண்டு ஊறிய நாவே இப்படி அழகாகப் பாட முடியும். இந்த ஒரு பாட்டே தேவியின் புகழைத் தமிழ் உள்ளமட்டும் காக்கும். இப்படி எத்தனையோ அரிய கவி மலர்கள் தேவியின் வாக்கிற் பூத்து, மலரும் மாலையுமாகக் குலுங்குகின்றன !

## 18. தேவியின் கவிமலர்கள்

1\. ஏழையுளந் திருக்கோயி லெனக்கொண்டு நீயும்
எழுந்தருளி யிருக்குமுறை யறிந்தடிமை யங்கே
சூழவரு வஞ்சனையைத் துரத்திநிறை யன்பாம்
சுந்தரநாண் மலர்மாலை சூட்டிநிதம் தொழுவேன் !

—அஞ்சலி

2\. மனமே நீயும் வருந்துவதேன் ?
மகிழ்ந்து தேவி திருநாமந்
தினமும் மறவா தன்போடு
தியானஞ் செய்து வாழ்வாயே ;
கனமா மணிசே கண்டியெலாம்
கனக மென்று முழக்காது,
நினைவை ஒடுக்கி நிகழ்த்திடுமந்
நிஷ்டைக் கேதும் நிகருண்டோ ?

—சக்திப் பாட்டு (அஞ்சலி)

3\. உண்மை யன்பை உடையவரே
உலகை யளந்த பெருமானை
அண்மை யாகக் கண்டிடுவர்,
அல்லார் காணார் காணாரே !

—மீராபாய் (அன்பின் வெற்றி)

4. காசியிலே இறப்பதனுல் பயனென் றில்லை ;
காஷாயம் தரிப்பதொரு வேஷ மேயாம் ;
ஆசையினை வேருடனே அறுக்க வேண்டும் ;
அழியுமுடல் அபிமானம் அகற்ற வேண்டும் ;
பேசுலகில் அழியாத பொருளொன் றில்லை ;
பெரியவர்க்கும் சிறியவர்க்கும் மரண மொன்றே ;
பாசமுறு சம்சாரம் அந்தியோடு
பறந்தகலும் பறவைவிளை யாட்டே யாமால் !

—மீராபாய் (அன்பின் வெற்றி)

5. வாழு முயிரினை வாங்கிவிடல்—இந்த
மண்ணி லெவர்க்கும் எளிதாகும்
வீழு முடலை எழுப்புதலோ—ஒரு
வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா !

—கருணைக் கடல்

6. நாடியசீர் நாடடைய நாட்டுருட்டும் கையே
நல்லகதர் நெய்யமிகு வல்லமைகொள் கையே
பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்
பண்ணமையப் பாடுதற்குப் பாணிகொட்டுங் கையே!

—கைத்திறன் (இயற்கை இன்பம்)

7. புல்லே யாயினும் புல்லிய குணமிலை ;
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன் ;
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன் ;
முயற்சி கைவிடேன் ; முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிது முவந்து பேணமுன் னிற்குமே !

—புல் (உள்ளமும் உணர்வும்)

8. யாவரே பெரியர் ? யாவரே சிறியர் ?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம் ;
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம் ;
ஆதலின், அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே !

—மலையும் அணிலும் (உள்ளமும் உணர்வும்)

9. ஓய்ந்து சோம்பி உறங்கா தேயடா,
ஊக்கம் பெருக உழைத்துமுன் னேறடா.
வாய்ந்த தொழிலில் மலையா தேயடா
மனமதில் ஒன்றி மகிழ்ச்சி கொள்ளடா!

* * * *

உயிரிலா மேற்கோள் உரைப்ப தேனடா?
உற்றவாழ் வின்பயன் உணர்ந்திங் கெய்தடா.
வியனுல கத்தில் நலந்தரும் அனுபவ
வேதாந் தத்தின் மெய்ப்பொருள் ஈதடா!

**—சுவாமி இராமதீர்த்தர் (வையமும் வாழ்வும்)**

10. நாமே நமக்குத் துணையானல்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்
சற்று மிதற்கோ ரையமுண்டோ?

* * * *

கால நதியின் கதியதனில்
கடவு ளாணை காண்பீரேல்
ஞால மீது சுக மெல்லாம்
நாளு மடைந்து வாழ்வீரே!

**—பா : 33, வையமும் வாழ்வும்**

11. வீடும் பழவீ டாகுதடா
விட்டம் கூரை சுவரெல்லாம்
ஆடி யலைந்து விழ நாளும்
அண்டி அண்டி வருகுதடா!
நாடி யிதனை யின்னும் நீ
நம்பி மோசம் போகாமல்
பாடிப் பாடி எம்பெருமான்
பாதம் போற்றி வாழ்வாயே!

* * *

பலநூல் கற்ற பண்டிதர்கள்
பலரும் சபைகள் பலகூடிக்
கலகம் வாதம் செய்திடுக;
கண்டங் கிழிய முழங்கிடுக.

மலரும் மலர்கள் வாடலுமிவ்
வாழ்வு நிலையா தோடலுமே
உலகம் கண்ட உண்மைகளாம்;
உண்டோ மற்றென் றுரைத்திடவே?

—பாரசீகக் கவியமுதம்

12. கூடி விருந்துண்ண வேண்டவில்லை—பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை;
நாடி எவரொடும் நட்பினராய்த்—தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டமுண்டோ?
கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ?

—சமூகப் பாடல்—51

13. சீலஉடை கதருடையாய்த் திகழவேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளரவேண்டும்;
வேலையிலாத் திண்டாட்டம் ஒழியவேண்டும்;
வெற்றியின்மேல் வெற்றியெமக் கெய்தவேண்டும்!

—தேசக்கொடி (தேசியம்)!

*　　*　　*　　*

வாசங் கமழும் தேவியின் கவிதை மலர்களை, அன்பர் நுகர்ந்து இன்புறு வார்களாக!

உணர்ச்சி ததும்புவது கவிதை—உள்ளே
ஊற்றெடுத்துப் பொங்குவது கவிதை;
மணக்க மலருவது கவிதை—புது
வாழ்வை வழங்குவது கவிதை!
சேயின் இளநகையைப் போலே—இளஞ்
செங்கதிரின் தங்கநகை போலே,
தாயின் முலைப் பாலைப் போலே—பொங்கித்
தானாய் வருவதுவே கவிதை!

—சுத்தானந்த பாரதி

முற்றிற்று.

# அன்பு நிலைய நூல்கள்

## யோகி ஸ்ரீ சுந்தரானந்த பாரதியார்

### இயற்றியவை

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| புதுக்கவி விட்மன் | 1 | 8 |
| மகாகவி ராஸீன் | 1 | 4 |
| மகாகவி தாந்தே | 1 | 8 |
| அற்புதப் பெண்மணி (மேரி-கூரி) | 1 | 0 |
| நாடகமணி மோலியர் | 0 | 13 |
| ஓவியக்கவி வில்லியம் ப்ளேக் | 0 | 10 |
| மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை | 0 | 10 |
| அருணாசலக் கவிராயர் | 0 | 8 |
| ஸ்ரீ சங்கர விஜயம் | 0 | 5 |
| அண்ணாமலை ரெட்டியார் | 0 | 3 |
| கோபாலகிருஷ்ண பாரதியார் | 0 | 3 |
| சதாசிவ ப்ரம்மம் | 0 | 2 |
| முத்துத்தாண்டவர் | 0 | 2 |
| அருட்சுடர் வள்ளலார் (கெட்டி அட்டை) | 1 | 6 |
| மகரிஷி தாயுமானார் | 0 | 4 |
| கலிமாவின் காதல் முதலிய கதைகள் | 1 | 0 |
| கஸ்தூரி (சிறு கதை) | 0 | 6 |
| அன்புறுதி | 0 | 4 |
| திருக்காட்சி | 0 | 6 |
| தமிழிசை முழக்கம் | 0 | 9 |
| இன்பமாலை | 1 | 0 |

ANBU NILAYAM,
PUBLISHERS & BOOK-SELLERS
**(Ramachandrapuram (P. O.)**
Trichy Dist., S. India.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
6006a